நூர் முகமது, திரு. வி. இராமசாமி, திரு. எம். சீரங்கன், திரு. எஸ். டி. உகம்சந்த், திரு. கே. சின்னசாமி, திரு. கே. பொன்னுசாமி. இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி 4 பேருக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. முதலிலே திரு. அப்துல் லத்தீப் (குறுக்கீடு).

5. ஒழுங்குப் பிரச்சினை.

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித்துறை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் உடல் நலம் குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவரவர்களே, On a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த ஒழுங்குப் பிரச்சினையாக இருந்தாலும், ஓர் அலுவல் நடந்து கொண்டிருந்தால் அது தொடர்பாக இருந்தால்தான் அனுமதிக்கப்படும். திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகிறார்களா ?

திரு. எம். அப்துல் லத்தீப் : Mr. Speaker, Sir, I am on a point of Order. Please allow me to havemy say on the point of order. தலைவரவர்களே, இந்த மன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய இரண்டு தகவல்களைக் குறித்து நான் ஒரு கேள்வியை எழுப்ப விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவது குறித்துப் பத்திரிகைகளில் பல்வேறு தகவல்கள் வருகின்றன. அவர்களுடைய நிலை என்ன ? டாக்டர்களுடைய அறிக்கை என்ன ? அவருடைய உடல் நலம் எப்படி இருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. அதே நேரத்தில் அமைச்சர் அந்தஸ்துள்ள எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மருத்துவ மனையில் இருக்கிறார்கள். அவர்களும் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்று பல தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே அவர்களுடைய உடல்நிலை எப்படி இருக்கிறது. அவர்களுடைய உடல்நிலைக்கு என்ன ? அவர்களுடைய டாக்டர்கள் கொடுத்த அறிக்கை என்ன ? இவர்கள் இருவரையும் கவனிப்பதற்கு அரசு ஒரு பேனல் ஆஃப் டாக்டர்ஸ் ஏற்படுத்துமா ? அப்படி ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ? இதுவரை அவர்கள் உடல்நிலை குறித்து அரசுக்குக் கிடைத்த தகவல்கள் என்ன என்பதை மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1989 மார்ச் 30]

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்களும் ஜெனரல் மருத்துவ மனையிலே-அரசினர் பொது மருத்துவ மனையிலே- அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு என்று ஒரு பேனல் ஆப் டாக்டர்ஸ் 4, 5 பேர் அமைக்கப்பட்டு, அவர்களே கவனித்து வருகிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா அவர்கள், தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களும் விரும்புவார்களானால், ஒரு பேனல் ஆப் டாக்டர்ஸ் நிச்சயமாக இந்த அரசு சார்பாக அமைக்கப்படும் என்பதைத் தான் இப்போது என்னால் சொல்ல இயலும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களைக் குறித்து, அரசு அக்கறை கொண்டிருக்க வேண்டாமா ? அவரது உடல்நிலை குறித்து தகவல் சேகரித் திருக்க வேண்டாமா ? இதுவரையில் அவர்களுடைய உடல் நிலை என்ன மாதிரி இருக்கிறது என்பதைப் பற்றி அரசு தகவல் சேகரித்தாவது, அல்லது அரசே தன்னிச்சையாக டாக்டர்களை அனுப்பியாவது, அவரது உடல் நிலை எப்படி இருக்கிறது என்பதை அறிந்து, இந்த மன்றத்திற்குத் தெரிவிப்ப தற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை, அவர்கள் விரும்பினால்தான் செய்ய இயலும். நாமாகச்செய்ய இயலாது. நாமே சில டாக்டர்களை அனுப்பிவைப்பதன் மூலமாக, அதைக் குறித்து வேறு செய்திகள் பரப்பிவிடப்பட்டாலும் பரப்பி விடப்படலாம் எனவே, அவர்கள் விரும்புவார்களானால் எத்தனை டாக்டர்களை வேண்டுமானாலும் பேனல் ஆப் டாக்டர்களாக அமைப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

2. தகவல் கோரல்— தொடர்ச்சி.

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் புன்முறுவலோடு பேசுகிறீர்கள். அது மகிழ்ச்சியாக இருக்கிறது. இதேபோல் அவை நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டீர்கள். நாங் களும் ஒத்துழைப்புக் கொடுக்கிறோம்—ஒத்துழைப்பைக் கொடுத் தோம்.

ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி பேசும்படி அழைக்கப் பட்டதற்குப் பின்னால் " I will speak only on the point of order I have raised ", என்று, எந்த உறுப்பினரைத் தாங்கள் அழைத்தீர்களோ அந்த உறுப்பினர், தேவையில்லாமல் இங்கே ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பினார்கள். அதேபோல் நான் உங்களிடத்திலே உங்கள் அறையில் பேசுகிற நேரத்தில் என்னுடைய உரிமை மீறல் தீர்மானத்தைத் தாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்குத் தாங்கள் எனக்குத் தந்திருக்கிற